1981 பிப்ரவரி 18]

இணைப்பு II

(233ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 245-க்கான விடையைக் காண்க)

விடை

(அ) மற்றும்(ஆ) நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில், 1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ஆம் நாள் உதவி தொழில் ஆணையர் முன்னிலையில் தொழில் தகராறு சட்டத்தின் விதி 12(3)-ன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இவ்வொப்பந்தத்தின்படி அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தைவிட சற்று குறைவாக உள்ளது. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செடிகள் முதிர்ச்சி அடையா இளஞ்செடிகளாக இருப்பதனால் வருமானம் குறைவாக உள்ளது. எனவே, கழகம் இழப்பிலேயே இயங்கி வருகிறது. இதற்கு மாறாக தனியார் தேயிலைத் தோட்டங்கள் நன்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளதால் அதிக வருமானம் ஈட்டி வருகின்றன. மேலும் தனியார் தேயிலைத் தோட்டங்கள் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் செய்வதுபோல் ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவு இலங்கை அகதிகளை வேலைக்கு அமர்த்துவதோ, புதிய தோட்டங்களை உருவாக்குவதோ இல்லை. மேற்கூறிய காரணங்களால் நீலகிரி மாவட்டம் கூடலூர் கூடலூர் மற்றும் பகுதிகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தனியார் தேயிலைத் தோட்டங்களில் கொடுக்கும் அளவு சம்பளம் கொடுக்க இயலவில்லை.

இணைப்பு III

(236-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 246-க்கான விடையைக் காண்க)

விரிவான அறிக்கை

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) ஊரக ஊழியர்கள் பயிற்சி பெற்று புதிய நுட்ப முறைகளை உழவர்களிடையே பரப்புவதற்கு வகை செய்யும் முறையில் விரிவாக்கப் பிரிவினை வலுப்படுத்த உத்-

[1982 பிப்ரவரி 18

தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேளாண்மைத் துறையிலும், தோட்டக் கலைத் துறையில் நீலகிரி மாவட்டத்திலும் அமுல க்கப் படும். உலக வங்கியின் உதவியுடன் நாடு முழுவதும் இத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதால் தமிழ்நாடும் இதில் சேர்ந்து கொள்ள வேண்டுமென்று மத்திய வேளாண்மை அமைச்சர் குறிப்பிட்டார். ரூபாய் 36,47 கோடி செலவில் இத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 70 சதவிதம் உலக வங்கி கடனாக வழங்கும். மற்ற செலவு மத்திய அரசும் மாநில அரசும் ஏற்கும். உலக வங்கி இத்தொகையை 1982 முதல் 1987 வரை ஆறு ஆண்டுகளில் வழங்கும். இக்கடனுக்கு ஆண்டிற்கு $\frac{3}{4}$ சதவிகிதம் பணி செலவாக (Service ch rge) கொடுக்க வேண்டும். கடன் தொகை 1991லிருந்து 2031 வரை யில் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

2. இத்திட்டம் இரண்டு கட்டமாக அமுல க்கப்படும்; முதலில் 1981ல் செங்கல்பட்டு, தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், மதுரை, கோவை, தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும், பிறகு 1982ல் மற்ற ஏழு மாவட்டங்களிலும் அமுலுக்கு கொண்டு வரப்படும். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு செலவு முழுவதும் தமிழ்நாடு அரசு ஏற்கும். இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

(1) வேளாண்மை இயக்குநர் முதல் கீழே கிராம விரிவாக்க தொழிலாளர் வரை ஒரே கட்டுப்பாட்டின் கீழ் இத் திட்டம் அமையும். தற்போது ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள வேளாண்மைப் பணியும் வேளாண்மைத் துறைக்கு மாற்றப்பட்டு ஊரக வளர்ச்சி துறையில் ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் மூன்று ஊரக வளர்ச்சி அலுவலர்கள் வேளாண்மை துறைக்கு மாற்றப் படுவர். இடுபொருள் அளிப்பது, தரக்கட்டுப்பாடு, விதை உற் பத்தி, இவைகள் தவிர மற்ற எல்லா திட்டங்களும் இத் திட்டத் தின் கீழ் அமையும், நீலகிரி மாவட்டத்தில் இத் திட்டம் தோட்டக்கலை இயக்குநரின் கீழ் செயல்படும்.

(2) தமிழகத்திலுள்ள 38·22 லட்சம் பண்ணை குடும்பங்கள் 4,777 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஒரு கிராம விரிவாக்கப் பணியாளர் பொறுப்பில் இருக்கும். ஒரு பணியாள ரிடமுள்ள 800 பண்ணைக் குடும்பங்களும் 100–150 குடும்பங்கள் கொண்ட எட்டு தொகுதிகளாக பிரிக்கப்படும். ஒவ்வொரு தொகுதியும் இப் பணியாளர்களால் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு குறிப்பிட்ட நாளன்று சென்று பார்க்கப்படும். பண்ணைக்குச் செல்லுதல், கிராம கூட்டங்கள் நடத்துதல், பயிற்சி பெறுதல், மேல் அலுவலர்களிடமிருந்து தரப்படும் வேளாண்மை உத்திகளை விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் போன்ற பணிகளை ஒவ்வொரு பணியாளரும் செய்ய வேண்டும். இரண்டு வாரங் களில் எட்டு நாட்கள் இவ் வேலைகளுக்கும், ஒரு நாள் பயிற்சிக்கும், ஒருநாள் மேல் அலுவலர்களுடன் கலந்தாலோசிப்பதற்கும் மற்ற

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

1982 பிப்ரவரி 18]

நாட்களில் விவசாயிகளுக்கு வேண்டிய இடுபொருள்களும் இருக்கின்றனவா என்று அறிந்து துறையின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் பயன்படுத்தப்படும். இப்பணியாளர்கள் தற்போதுள்ள உதவி வேளாண்மை அலுவலர் தரத்தில் இருப்பார்கள்

(3) தொழில் நுட்ப வல்லுநர்கள் பணியாளர்களுக்கு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை முக்கிய பயிற்சி அளிப்பதுடன் ஆறு மாதத்திற்கு ஒரு முறை பருவத்திற்கேற்ப பயிற்சியும் அளிக்கப்படும். விரிவாக்கப் பணியாளர்களுக்கு பதினைந்து நாட்கள் முதல் ஒரு மாதத்திற்கு பயிற்சி அளிக்கப்படும். இது தவிர, மாநிலத்திற்கு வெளியிலும் குறைந்த கால பயிற்சி பணியாளர்களுக்கும் உதவி அலுவலர்களுக்கும் அளிக்கப்படும்.

(4) 6-10 உதவி வேளாண்மை அலுவலர்களையும், 50 பணியாளர்களையும் மேற்பார்வையிட ஒரு வட்டத்திற்கு (சிறியதாக இருந்தால் இரண்டு வட்டங்களுக்கு) ஒரு உதவி வேளாண்மை இயக்குநர் அமர்த்தப்படுவர். ஒவ்வொரு வட்டத்திற்கும் வேளாண்மை இயலறிஞர்களும், பயிர் பாதுகாப்பு வல்லுநர்களும் தகவல் மற்றும் பயிற்சி வல்லுநர்களும், உதவி வேளாண்மை அலுவலர்களும் (இடுபொருள்) உதவியாக இருப்பார்கள்.

(5) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு இணை வேளாண்மை இயக்குநர் இத்திட்டத்துடன் மற்ற எல்லா வேளாண்மை நடவடிக்கைக்கும் பொறுப்பேற்றிருப்பார்கள். இத்திட்டத்திற்கு மட்டும் தனியாக துணை இயக்குநர்களும் இருப்பார்கள். ஒவ்வொரு வட்டத்திற்கும் இருப்பது போன்று மாவட்டத்திற்கும் இணை இயக்குநருக்கு உதவியாக துணை இயக்குநர் பதவியிலும் தொழில் நுட்ப அலுவலர்கள் இருப்பார்கள்.

(6) இத்திட்டத்தின் அலுவலர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் இடத்திற்கு அருகில் வீடு கட்டிக் கொடுக்கப்படும். சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு எளிய முறையில் கடன் வசதி வழங்கப்படும்.

(7) பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்க ஒளி ஒலிக் கருவி பயன்படுத்தப்படுவதுடன் அவர்களுக்கு செய்தி அறிவிப்பு முறைகளும் கற்பிக்கப்படும்.

இணைப்பு IV

(355ம் பக்கத்தில் அடிக்குறிப்பைத் காண்க.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவை முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் வாரியத்தின் 1981-82ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1980-81 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை, ஆகியவற்றை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.